**ARTICLE 36 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00086**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 51–55
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# தொ. மு. சி. ரகுநாதனின் “பாரதி காலமும் கருத்தும்” நூலில் இடம்பெற்றுள்ள முற்போக்கு சிந்தனைகள்.

**முனைவர். சிந்து ந**[1,*]
[1]உதவிப் பேராசிரியர் தமிழ்த் துறை, நூருல் இஸ்லாம் உயர் கல்வி மையம், குமாரகோவில், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம்-629180., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். சிந்து ந — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தொ. மு.சிதம்பர ரகுநாதன் தமிழின் முன்னோடி எழுத்தாளர் ஆவார். இவர் சிறுகதை நாவல் கவிதை நாடகம் என பல படைப்புகளை படைத்துள்ளார். திருச்சிற்றம்பல கவிராயர் என்ற புனைப் பெயரிலும் கவிதை எழுதியுள்ளார். இவரது பஞ்சும் பசியும் என்ற நாவல் நெசவாளர்களின் துயர வாழ்வை பேசும் நாவலாகும். இது செக் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது அயல் மொழியில் அதிக அளவு விற்பனையான முதல் தமிழ் நாவல் இந்நாவல் ஆகும் இவர் எழுதிய பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் முற்போக்கு சிந்தனையும் சமூகப் புரட்சியும் சாதிய கட்டமைப்பும் வர்க்கப் போராட்டத்தையும் கொண்ட நூலாகும். இந்நூலில் பாரதியை ஒரு ஆன்மீக கவிஞராகவோ தேசபக்த கவிஞராகவோ பார்த்த பார்வையில் இருந்து மாறுபட்டு பாரதி வர் க்க முரண்பாடுகளை சமூக ஒடுக்கு முறைகளையும் அறுத்தெறிய வந்த புரட்சியாளர் என்பதை என் நூலில் மிகவும் அழுத்தமாக பதிவு செய்துள்ளார். சாதிய கட்டமைப்பிற்கு எதிரான வர்க்க புரட்சி நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு சமூகப் புரட்சி சமூக அமைப்போடு கூடிய பெண் விடுதலை, அதாவது பெண் விடுதலையின் சமூக பரிமாணம், உலகளாவிய மனித நேயம், ஒடுக்கப்பட்டோர் மீதான வர்க்கப் புரட்சி, மதசார்பற்ற ஆன்மீகம், பாரதியின் சோசலிச பார்வை பொருளாதார ஏற்றத்தாழ்வு அற்ற வர்க்க உணர்வு உழைக்கும் வர்க்கத்தின் எழுச்சி தொழில் மற்றும் கூட்டுடைமைக் கொள்கை இவை போன்ற பல்வேறு முற்போக்கு சிந்தனைகளை பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் முன் வைத்துள்ளதை இவ்வாய்வு ஆராய்ந்துள்ளது.

**Keywords / திறவுச் சொற்கள்:** புரட்சி; வர்க்கம்; கட்டமைப்பு; முரண்பாடுகள்; பிரபுத்துவம்; முற்போக்கு சிந்தனைகள்; மனிதநேயம்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ந, மு. சி. (2026). தொ. மு. சி. ரகுநாதனின் “பாரதி காலமும் கருத்தும்” நூலில் இடம்பெற்றுள்ள முற்போக்கு சிந்தனைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Part II, pp. 51–55.

## முன்னுரை

ஒரு சமுதாயத்தின் வாழ்வியலை எடுத்துக்காட்டுவது இலக்கியங்கள் ஆகும். ஒரு சமுதாயத்தை மற்றொரு சமுதாயத்தினின்று வேறுபடுத்தி அறிவதற்கு துணையாக இருப்பதும் இலக்கியம் எனலாம். இவ்விலக்கியத்தை காலத்தை காட்டும் கண்ணாடி என்பர். படைக்கப்படும் ஒவ்வொரு இலக்கியத்தின் முக்கிய நோக்கம் சமுதாயத்தை பிரதிபலிப்பதே ஆகும். அந்த வகையில் தொ.மு.சிதம்பர ரகுநாதனின் “பாரதி காலமும் கருத்தும் “என்ற நூல் சமுதாயத்தின் அடி நாதமாக விளங்கும் மக்களின் போராட்ட வாழ்க்கையும் அரசியல்வாதிகளாலும் முதலாளித்துவ வர்க்கத்தினராலும் மக்கள் சுரண்டடப்படுவதையும் சோசலிசத்தையும் பெண்ணியத்தையும் உலக மனிதாபிமானத்தையும் சித்தரிக்கின்றது

இவை தொடர்பான முற்போக்கு சிந்தனைகளை இந்த நூலில் ஆசிரியர் எவ்வாறு எடுத்துரைத்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## சாதி ஒழிப்பும் முற்போக்கு சிந்தனையும்

கவிதை வரலாற்றில் பாரதியின் கவிதை தோற்றம் என்பது தனி நபர் எழுச்சியாக மட்டுமல்ல இந்திய சமூக பொருளாதார அரசியல் சூழலின் வரலாற்று ரீதியான திருப்புமுனை என தொ.மு.சி.ரகுநாதன் அவர்கள் பாரதி காலமும் கருத்தும் என்ற நூலில் மிக அழுத்தமாக பதிவு செய்துள்ளார். பாரதியை தன்னுடைய காலத்தின் வர்க்க முரண்பாடுகளை சாதிய ஒடுக்கு முறைகளையும் விளக்க வந்த புரட்சியாளராக ரகுநாதன் இந்த நூலில் அடையாளப்படுத்துகிறார். இந்தியச் சூழலில் சாதி என்பது வெறும் சமூகப் பிரிவு மட்டுமல்ல அது வர்க்கச்சுரண்டலின் ஒரு வடிவமாகவே இருந்துள்ளது என்பதை மார்க்சிய தத்துவ பின்னணியில் ரகுநாதன் விளக்கியுள்ளார்.

நில பிரபுத்துவ சமூக அமைப்பில் உழைக்கும் மக்கள் சாதியின் பெயரால் அடிமைகளாகவும் தீண்டத்தகாதவர்களாகவும் வைக்கப்பட்டிருந்தனர். பாரதி சாதியை எதிர்த்த போது அவர் நில பிரபுத்துவ சுரண்டலின் வேர்களையே தாக்கினார் என்று ரகுநாதன் கூறுகின்றார். பாரதி வாழ்ந்த காலத்தில் நிலவிய பார்ப்பனிய ஆதிக்கத்தையும் சாதி பிரிவினைகளையும் தொ.மு.சி. ரகுநாதன் வரலாற்று தரவுகளுடன் பாரதியின் “சாதிகள் இல்லையடி பாப்பா” என்ற எளிய வழிகளுக்கு பின்னால் இருக்கும் சமூக புரட்சிக்கான ஆழமான தத்துவத்தை இந்நூலில் எடுத்துக்காட்டுகிறார்.

பாரதி பார்ப்பனராக பிறந்த போதிலும் பூணூலை துறந்து கனகலிங்கம் என்ற தாழ்த்தப்பட்ட சமூக இளைஞருக்கு பூணூல் அணிவித்த வரலாற்று நிகழ்வை ரகுநாதன் வெறும் சீர்திருத்த செயலாக கூறவில்லை அது சாதிய கட்டமைப்பின் உச்சியில் இருந்த ஒரு தத்துவார்த்த குறியீட்டை உடைத்தெறிந்த புரட்சிகரமான முற்போக்கு செயல்பாடு என்று மதிப்பிடுகின்றார்.

> “பார்ப்பானை ஐயரென்ற
> காலமும் போச்சே
> வெள்ளைப்
> பரங்கியைத் துறையென்ற
> காலமும் போச்சே -பிச்சை
> ஏற்பாரை பணிகின்ற காலமும்
> போச்சே”

என்பதில் சாதிய ஆதிக்கத்தின் அடையாளமான பார்ப்பானும் வெள்ளைய ஆதிக்கத்தின் அடையாளமான பரங்கியும் வர்க்க ஆதிக்கத்தின் அடையாளமான பணக்காரர்களும் ஒரே நேர்கோட்டில் பாரதியால் எதிர்க்கப்படுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டுகிறார் இதன் மூலம் பாரதியின் சாதி எதிர்ப்பு என்பது இயல்பாகவே வர்க்க புரட்சியுடன் கூடிய முற்போக்கு சிந்தனையாகி விடுகின்றது. “இப்பொழுது இருக்கின்ற சுவடு எங்கும் மாறும் என்று பாடியவர் பாரதி” சாதி ஒழிய வேண்டுமானால் உழைப்பவனின் கையில் அதிகாரம் கிடைக்க வேண்டும் என்பதை பாரதி உணர்ந்திருந்தார். “தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்ற பாரதியின் பாடல் வரி ஜாதியால் ஒடுக்கப்பட்டு

உணவின்றி தவித்த ஏழை எளிய மக்களின் குரலாகும் என்று ஆசிரியர் கூறுகின்றார். பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் பாரதியை ஒரு சாதி ஒழிப்பு முற்போக்கு சிந்தனை வாதியாகவும் எதிர்ப்பு வெறும் மேலோட்டமான சீர்திருத்தம் அல்ல சமூகத்தின் அடித்தளத்தையே மாற்றி அமைக்க வந்த வரிகள் என்று இந்நூலில் ஆசிரியர் கூறுகின்றார்.

## பெண் விடுதலையும் முற்போக்கு சிந்தனையும்

பாரதி வாழ்ந்த காலத்தில் நிலவிய பெண் விடுதலை விடுதலைகளுக்கு எதிரான அடக்குமுறைகளையும் அதற்கு எதிராக பாரதி எடுத்த முற்போக்கு நிலைகளையும் என் நூலாசிரியர் விரிவாக விளக்கியுள்ளார் அன்றைய சமூகத்தில் நடைமுறையில் இருந்த குழந்தை திருமணம் விதவைக் கொடுமை தேவதாசி முறை மற்றும் பெண்களை வீட்டின் நான்கு சுவர்களுள் முடக்கி வைக்கும் நிலைமை அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பதற்கு என்ற பிற்போக்குத்தனமான கருத்துக்களை பாரதி கடுமையாக எதிர்த்துள்ளார் ஆண்களுக்கு ஒரு நீதியும் பெண்களுக்கு ஒரு நீதியும் கற்பிக்கும் இரட்டை அநீதியை பாரதி ஏற்றுக்கொள்ளவில்லை, “ கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம் “ என்ற வரிகள் மூலம் பெண்களின் மீதான கற்பு சார்ந்த சமூக கட்டுப்பாடுகளை ஆண்களுக்கும் பொதுவாக வேண்டும் என்று சமத்துவ குரலை அதாவது முற்போக்கு சிந்தனையை அவர் எழுப்பியதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார் பாரதியின் பெண் விடுதலை சிந்தனையில் ஏற்பட்ட மிகப்பெரிய திருப்பத்தை ஆசிரியர் விரிவாக விவரிக்கின்றார் பாரதி தனது அரசியல் குருவாக கருதிய சகோதரி நிவேதிதாவை சந்தித்த பிறகே அவரது பெண் விடுதலை குறித்த பார்வையில் தெளிவும் தீவிரமும் கூடியது என்கின்றார் முழுமையான சுதந்திரம் பெண்ணை வெறும் போகப் பொருளாகவோ அல்லது ஆணுக்கு அடங்கிய துணையாகவோ பார்க்காமல் அவளை சமூகத்தின் சமமான சக்தியாக பார்க்க நிவேதிதா தேவியின் சந்திப்பு பாரதிக்கு வழிகாட்டியது என்கிறார்.

பராசக்தியின் வடிவம் பெண்ணை வீட்டின் லட்சுமியாக மட்டும் பார்க்காமல் அறிவும் வீரமும் நிறைந்த பராசக்தியின் வடிவமாகவே பார்க்கும் ஆன்மீக மற்றும் சமூக விழிப்புணர்வை பாரதி பெற்றார் பாரதி படைத்த புதுமைப் பெண் உருவம் அன்றைய பாரம்பரிய கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு புரட்சி பெண்ணாக ஆசிரியர் ஆராய்கின்றார் “நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்” கொண்ட பெண்ணே பாரதி கண்ட புதுமைப்பெண். அச்சமும் மடமையும் நாணமும் பெண்களுக்கு உரிய குணங்களாக கூறப்பட்டு வந்ததை அவற்றையெல்லாம் விளக்கி தலை நிமிர்ந்து நிற்பதே புதுமைப் பெண்ணின் அடையாளம் என்கின்றார். புதுமைப்பெண் என்பவள் யாரையும் சார்ந்திருக்க மாட்டாள் தனது வாழ்வின் முடிவுகளை தானே எடுக்கும் சுயமரியாதையும் சிந்தனையும் சுதந்திரமும் படைத்தவள் என்று கூறுகின்றார் தொ. மு.சி ரகுநாதன் தனது ஆய்வில் பாரதியின் பெண் விடுதலை கோட்பாட்டில் பொருளாதார சுதந்திரத்திற்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றார்.

பெண்கள் கல்வி கற்பது வெறும் வாசிப்பிற்காக மட்டுமல்ல அவர்கள் உலக அறிவை பெறவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தவும் அவசியம் என்பதை பாரதி வலியுறுத்தினார் தொழில் மற்றும் பொருளாதார

தன்னாட்சி பெண்கள் வீட்டிற்குள் அடங்கி கிடக்காமல் தொழில் செய்யவும் அரசு நிர்வாகம் மற்றும் அறிவியல் துறைகளில் ஈடுபடவும் வேண்டும் என்று விரும்பியதை சாத்திரங்கள் கற்போம் சட்டங்கள் செய்வோம் என்ற பாரதியின் வரிகள் பெண்கள் சட்டம் இயற்றும் அதிகாரத்தை பெற வேண்டும் என்ற முற்போக்கு சிந்தனையை வெளிப்படுத்துகின்றன பாரதியின் தேச விடுதலையும் பெண் விடுதலையும் ஒன்றோடு ஒன்று சிரிக்க முடியாதவை என்பதை ரகுநாதன் இந்நூலில் முழுவதும் தெளிவுபடுத்தி உள்ளார் நாட்டின் மக்கள் தொகையில் பாதியாக இருக்கும் பெண்களை அடிமையாக வைத்துக் கொண்டு இந்திய தேசம் ஆங்கிலேயர் ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற முடியாது என்பதை கூறுகின்றார் ஒரு நாட்டின் நாகரீகமும் முன்னேற்றமும் அந்த நாடு பெண்களை எவ்வாறு வழிநடத்துகின்றது என்பதை பொறுத்து அமைகின்றது பெண்கள் ஒடுக்கப்படும் வரை எந்த ஒரு சமூகமும் உண்மையான சுதந்திரத்தை அடைய முடியாது என்று பாரதி பாதித்ததை ஆசிரியர் முன்வைக்கின்றார்.

தொ மு சி ரகுநாதனின் பாரதி காலமும் கருத்தும் என்ற நூல் பாரதியை வெறும் கவிஞராக மட்டுமின்றி சமூகப் புரட்சியாளராகவும் உயர்த்தி காட்டுகின்றது பாரதியின் பெண் விடுதலை கருத்துக்கள் அன்றைய காலத்தின் எல்லையை கடந்து இன்றைக்கும் பொருந்தக்கூடிய முற்போக்கு சிந்தனைகளாக மிளிர்கின்றன பெண்களின் கல்வி சம உரிமை பொருளாதார சுதந்திரம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை வற்புறுத்திய பாரதியின் பார்வை தமிழ் சமூக சீர்திருத்த வரலாற்றில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கியது என்கிறார் ஆசிரியர்.

## மனித நேயமும் முற்போக்கு சிந்தனையும்

காலத்தின் சூழல் கவிஞனை மனிதநேயமுடையவனாக எவ்வாறு உருவாக்குகின்றது என்பதே பாரதியின் காலத்தைச் சூழ்ந்திருந்த இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் விக்டோரியா காலத்திய நில பிரபுத்துவ சூழல் மற்றும் உலக புரட்சிகள் பாரதியை ஒரு முற்போக்கு சிந்தனை ஆளாக மாற்றியது என நூலின் ஆசிரியர் விளக்குகின்றார். அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாரதியின் மனிதநேயம் வெறும் மனிதர்களுக்கு உள்ளான எல்லைகளுக்கு உட்பட்டது அல்ல. “ காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம் “ என்ற வரிகளின் வலி உலக உயிர்களையும் தன் உயிராக பார்க்கும் பரந்த மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது. சாதி மத வர்க்க வேறுபாடுகளைக் கடந்து மனித குலம் முழுவதையும் ஒன்றென போற்றும் மானுட சமத்துவத்தை பாரதி தமது கவிதைகளில் கட்டுரைகளில் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை தொ. மு. சி.ரகுநாதன் தனது நூலில் அதாவது பாரதி காலமும் கருத்தும் என்ற நூலில் வெளிப்படுத்துகின்றார் “மா காளி பராசக்தி உருசிய நாட்டில் கடைக்கண் வைத்தால் “ என்று பாரதி பாடிய வர்க்கப் போராட்டத்தினை முற்போக்கின் உச்சமாக ஆசிரியர் அடையாளப்படுத்துகிறார்.“தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்ற பாரதியின் இந்த பாடல் வரி ஏழை பணக்காரன் என்ற இடைவெளியை எதிர்க்கும் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது என்கின்றார். மூடநம்பிக்கைகள் சடங்குகள் பெண் அடிமைத்தனம் ஆகியவற்றிற்கு எதிரான புரட்சிகரமான பாரதியின் கவிதைகளை ஆதாரங்களுடன் ஆசிரியர் விளக்கியுள்ளார் பெண்களின் கல்வி சம உரிமை மற்றும் நிமிர்ந்த நன்னடை சார்ந்த பாரதியின்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

புதுமைப்பெண் உருவகம் அக்கால சமூக தேவையின் விளைவாக எழுந்த முற்போக்கு கருத்து என்பதை விளக்குகின்றது. பாரதியின் தேசபக்தி என்பது குறுகிய எல்லைக்குள் மட்டுமல்ல அது நாட்டின் விடுதலையையும் எழுச்சியையும் விரும்பிய அதே வேளையில் உலக மக்கள் அனைவரின் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் போற்றிய ஒரு மனித நேயமாக அது மலர்ந்துள்ளது என்பதையும் ஆசிரியர் விளக்குகின்றார்.

பாரதியின் கவிதைகள் இந்திய எல்லைக்குள் மட்டுமல்ல ஒட்டுமொத்த மனித குலத்தின் விடுதலைக்கான முழக்கமாக இருந்தது பாரதி வாழ்ந்த காலம் என்பது ஆங்கில ஏகாதிபத்திய ஒடுக்கு முறையை உலகளாவிய அளவில் பல்வேறு முதலாளித்துவ சுரண்டல்களும் நிகழ்ந்த காலமாகும் வித்தகைய சொல்லில் பாரதியின் மனிதநேயம் என்பது வெறும் உணர்ச்சிவசப்பட்ட கவிதை வரிகள் அல்ல அவை" யாதும் ஊரே யாவரும் கேளிர்" இந்திய மரபில் இந்திய மானுடத்தின் மீதான தத்துவார்த்த கவிதை வரிகள் ஆகும்.

## முடிவுரை

தொ.மு.சி.ரகுநாதனின் பாரதி காலமும் கருத்தும் என்ற ஆய்வு நூல் பாரதியை ஒரு தேசிய கவிஞராக மட்டும் பார்க்காமல் பாரதியை உலகளாவிய மனித நேயத்தின் அடையாளமாக காட்டுகின்றது மனித குலத்தை ஒடுக்கும் சாதி வர்க்கம் தேசம் மதம் என்ற அனைத்து சுவர்களையும் தகர்த்து ஒரு புதிய சமத்துவ உலகை படைக்க பாரதியின் கனவை தொ மு சி ரகுநாதன் மார்க்சிய பார்வையில் துள்ளியமாக இந்த நூலை தொகுத்துள்ளார் பாரதியின் உலகளாவிய மனித நேயம் இன்றும் உலகத்திற்கு தேவையான ஒரு உன்னத வழிகாட்டியாக இருக்கின்றது. பாரதியின் சிந்தனைகளில் இருந்த சோசியலிச தொலைநோக்கு பார்வை சிறந்த வரலாற்றுச் சான்றுகளுடஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். பாரதி தன் காலத்தில் வெளிப்படுத்திய சாதி எதிர்ப்பு பெண் விடுதலை மற்றும் மானுட சமத்துவம் ஆகிய முற்போக்கு சிந்தனைகள் வெறும் கவிதை நயத்திற்காக மட்டுமல்ல அவை சமூக மாற்றத்திற்கான தீர்க்கமான கருவிகள் என்பதை வரலாற்று பூர்வமாக தொ.மு.சி. ரகுநாதன் இந்நூலின் வழியே எடுத்துக் கூறியுள்ளார்.பாரதியின் இத்தகைய முற்போக்கு சிந்தனைகள் காலங்களை கடந்தும் அவரை ஒரு சமூகப் புரட்சியாளராக நிலை நிறுத்துகின்றது என்பதை என் நூலின் வழியே நாம் அறியலாம்.

© 2026 முனைவர். சிந்து ந. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..